ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2203/28 - 2020 නොවැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.11.26

*2203/28 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, களியாட்ட வரி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட களியாட்ட நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய வரியின் சதவீதம் பற்றி கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விதித்து 2021 ஆம் மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடுவதற்காக 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளுக்கமைய கொழும்பு மாநகர சபையினால் 2020.07.30 ஆந் திகதி சபையில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையை, மேல் மாகாணத்தின் ஆளுநர் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அங்கீகரித்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**ரொஷான் குணதிலக்க,**
ஆர்டப்பீ அன்ட் பார் வீஎஸ்வீ யூஎஸ்பீ
பீஎச்டி (சிறப்பு) எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்
மேல் மாகாணம்.

மாகாண சபைக் கட்டடத் தொகுதி,
இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2019, நவெம்பர் 18.

1A - PG 5168 — 35 (2020/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| தொ. இல. | வகை | களியாட்ட செயற்பாடுகளின் தன்மை | வீதம் |
|---|---|---|---|
| 01 | A | • சினிமா தியேட்டர் | 10% |
| 02 | B | • வெளிநாட்டு கலைஞர்கள் சமுகமளிக்கின்ற சகல கலை நிகழ்ச்சி<br>• சகல களியாட்டம், வீரர், வீராங்கனை செயற்பாடு (சேர்க்கஸ்)<br>• வர்த்தக நோக்கத்திற்காக நடாத்தப்படுகின்ற தேசிய கலைஞர்கள் சமுகமளிக்கின்ற சகல கலை நிகழ்ச்சிக்கு | 12% |
| 03 | C | • சர்வதேச விளையாட்டுப் போட்டி | 13% |
| 04 | D | • உள்நாட்டு கலைஞர்கள் சமுகமளிக்கின்ற உணவு இன்றி விலை குறிப்பிடப்படுகின்ற DJ கலை நிகழ்ச்சி, நடன காட்சி, Sing Alone மற்றும் ஏனைய நடன வாத்தியம் சகிதம் கலை நிகழ்ச்சி<br>• மெஜிக் காட்சி, சித்திர ஓவிய கண்காட்சி மற்றும் சித்திர ஓவியப் போட்டி<br>• ஹோலி பண்டிகை<br>• நலன்புரிச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற சங்கம் மற்றும் சமூக அமைப்புக்களினால் நடாத்தப்படுகின்ற கலை நிகழ்ச்சி | 10% |
| 05 | E | • அமுலாக்கல் மட்டத்தில் காணப்படுகின்ற கலைஞர்களின் சங்கம் ஆரம்பத்தில் நடாத்தப் படுகின்ற கலை நிகழ்ச்சி (ஆண்டொன்றுக்கு ஆகக்கூடிய கலை நிகழ்ச்சி மூன்று)<br>• தேசிய விளையாட்டுப் போட்டி<br>• தேசிய மேடை நாடக பாட்டு சகிதம் கலை நிகழ்ச்சி | 08% |
| 06 | F | • தற்பொழுது பிரசித்தம் பெற்ற கலைஞர் ஒருவரினால் தமது வாழ்க்கையின் விசேட சந்தர்ப்பமாக நடாத்தப்படுகின்ற கலை நிகழ்ச்சிக்காக (வாழ்கின்ற காலத்தினுள் ஒருமுறைக்காக மாத்திரம்)<br>• பாடசாலை ஒன்றினால் பாடசாலையின் நலன்புரிக்காக நடாத்தப்படுகின்ற விண்ணப்பதாரர், அதிபரினால் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி சகிதம் கலை நிகழ்ச்சி<br>• பாடசாலை அல்லது பழைய மாணவர் சங்கம் அல்லது கல்லூ ரி சங்கத்தினால் பாடசாலைக்காக நடாத்துகின்ற விளையாட்டுப் போட்டி மற்றும் பாடசாலை விளையாட்டுச் சங்கம் என்பவற்றால் நடாத்தப்படுகின்ற போட்டி<br>• உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் மாணவர் சங்கத்தினால் மாணவர் சேமநலத்திற்காக நடாத்தப்படுகின்ற விநோத செயற்பாடு | 07% |
| 07 | G | • DINNER DANCE / SING ALONE (உணவு சகிதம் விலை நிர்ணயிக்கப்படுகின்ற ரூபா 3,000 இற்கு மேலதிகமான பிரவேசப் பத்திரம்) | 07% |
| 08 | H | • தற்பொழுது திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பிரபல்யம் பெற்ற கலைஞர் ஒருவரின் புற்று நோய், சிறுநீரகம், கடுமையான திடீர் விபத்து மற்றும் கடுமையான இருதய, நரம்பு மற்றும் மூளை தொடர்பான நோய்களுக்கு மருத்துவ உதவிக்காக அல்லது 75 வயதைத் தாண்டிய பிரசித்தம் வாய்ந்த கலைஞர் ஒருவரின் இறுதிக் கலை நிகழ்ச்சிக்காக கௌரவ முதலமைச்சரினால் களியாட்ட வரி விலக்களிக்கப்பட்ட கலை நிகழ்ச்சி (வாழ்க்கையில் ஒரு முறை) | அறவிடப்பட மாட்டாது |

12 - 76

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.